


**18.02.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **இரட்டை வரிவிதிப்பு மற்றும் வரி ஏய்ப்பு முறைகேடுகளை** தடுக்கும் வகையில் இந்தியா - கத்தார் நாடுகளுக்கு இடையே உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது

2. **விவசாயிகளுக்கு பயனளிக்கும் பிரதமரின் பயிர்காப்பீடு திட்டம்** 9-வது ஆண்டை நிறைவு செய்துள்ளது.

3. **திருச்சி பஞ்சப்பூர், மதுரை மாட்டுத்தாவணியில் 717 கோடி ரூபாய்** மதிப்பீட்டிலான தகவல் தொழில்நுட்ப பூங்காக்களுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

4. **தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்தமாதம்** 14-ம் தேதி தொடங்குகிறது.

5. **புபனேஸ்வரில் நடைபெறும் ஹாக்கி ப்ரோ லீக் போட்டிகளில்** இந்திய ஆடவர், மகளிர் அணிகள் இன்று களமிறங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**இரட்டை வரிவிதிப்பு மற்றும் வரி ஏய்ப்பு முறைகேடுகளை** தடுக்கும் வகையில் இந்தியா கத்தார் நாடுகளுக்கு இடையே உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

புதுதில்லி ஐதராபாத் இல்லத்தில் பிரதமர் திரு. நரேந்திமோடி மற்றும் கத்தார் அமீர் ஷேக் தமீம் பின் ஹம்மத் ஆகியோரிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து இருவர் முன்னிலையிலும் இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது.

மேலும் இருநாடுகளுக்கு இடையே அரசியல் ரீதியிலான நட்புறவை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒப்பந்தமும் இன்று கையெழுத்தானது.

2 நாள் அரசுமுறை பயணமாக இந்தியா வந்துள்ள கத்தார் மன்னரிடம், பிரதமர், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடினார்.

முன்னதாக கத்தார் அரசருக்கு, குடியரசு தலைவர் மாளிகையில் சிறப்பான பாரம்பரிய சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவும், பிரதமர் திரு. நரேந்திரமோடியும், கத்தார் அமீரை வரவேற்றனர்.

இதனிடையே மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயலும், கத்தார் வர்த்தக அமைச்சர் திரு. ஷேக் ஃபைசல் பின்னும், இந்திய - கத்தார் கூட்டு வர்த்தக கூட்டமைப்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்திய தொழில் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் இருநாடுகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

❖❖❖❖❖❖

**பயிர்காப்பீடு திட்டம்**

**இயற்கை பேரிடரின் போது சேதமடைந்த பயிர்களுக்காக** விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்குவதை உறுதிசெய்யும் பிரதமரின் பயிர்காப்பீடு திட்டம் தொடங்கப்பட்டு 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

2016-ம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திரமோடி இந்த திட்டத்தை தொடங்கிவைத்தார்.

விவசாயிகளின் நிலையான வருமானத்திற்கும், புதுமையான வேளாண் முன்னெடுப்புகளை ஊக்குவிக்கவும் இந்த திட்டம் முக்கிய பங்காற்றுகிறது.

இந்த திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து 69 ஆயிரத்து 515 கோடி ரூபாய் மதிப்பில் மறுசீரமைக்கப்பட்ட பருவநிலைக்கு ஏற்ற பயிர்காப்பீடு திட்டத்தை தொடர மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

**பரிக்ஷா பே சர்ச்சா**

**மாணாக்கரின் தேர்வு மனஅழுத்தத்தை குறைக்கும்** வகையிலான **பரிக்ஷா பே சர்ச்சா 2025** நிகழ்வின் ஒருபகுதியாக கல்வியில் முன்னிலை வகிக்கும் மாணாக்கர் தங்களது எண்ணங்களை இன்று பகிர்ந்து கொள்கின்றனர்.

பொதுத்தேர்வுகள் நடைபெற்று வரும் நிலையில் தேர்வு பயத்தை இலகுவாக எதிர்கொள்ளும் வழிமுறைகள் குறித்து கல்வி முன்னோடிகளின் ஆலோசனைகளுக்கு பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**கியானேஷ்குமார்**

**நாட்டின் புதிய தலைமைத்தேர்தல் ஆணையராக** திரு. கியானேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு பிறப்பித்துள்ளார்.

தற்போதைய தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமாரின் பதவிக்காலம் இன்றுடன் நிறைவடைவதால் புதிய தலைமை தேர்தல் ஆணையராக திரு. கியானேஷ்குமார் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

டாக்டர் விவேக் ஜோஷி புதிய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**திருச்சி பஞ்சப்பூர், மதுரை மாட்டுத்தாவணியில்** 717 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காக்களுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக இன்று அடிக்கல் நாட்டினார்.

சென்னை தலைமை செயலகத்திலிருந்து முதலமைச்சர் தொடங்கிவைத்த இப்பூர்வாங்க பணிகளின் மூலம் மாநிலத்தில் 12 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்தறி தொழில்கள் வளர்ச்சி கழகத்தின் சார்பில் 10 சிறந்த கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் அவர் வழங்கி கவுரவித்தார்.

இந்நிகழ்வில் 65 வயதிற்கு மேற்பட்ட 9 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினை பொக்கிஷம் விருதுகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

கலை பண்பாட்டுத்துறை சார்பில் சென்னை, மதுரை மாநில அரசு இசைக்கல்லூரிகளில் 4 மாற்றுத் திறனாளிகளுக்கு விரிவுரையாளர்கள் பணியிடத்திற்கான நியமன ஆணைகளையும் வழங்கினார்.

எழுதுபொருள், அச்சுத்துறையில் நிலை-2 பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 19 பேருக்கும், கருணை அடிப்படையில் ஒருவருக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 பேருக்கு இதற்கான ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

**தமிழக சட்டப்பேரவை**

**தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர்** அடுத்தமாதம் 14-ம் தேதி தொடங்குகிறது.

2025-26ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அன்று தாக்கல் செய்வார் என்று சட்டப் பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

**.. வாய்ஸ் ..**

மார்ச் 15-ம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது.

2025-26ம் நிதியாண்டிற்கான முன்பண மானிய கோரிக்கை மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான கூடுதல் செலவீனங்களுக்கான மானிய கோரிக்கைகளும், அடுத்தமாதம் 21-ம் தேதி சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

இதனிடையே வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை தயாரிப்பு தொடர்பான ஆலோசனை கூட்டம் மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

**உதயநிதி**

**தமிழ்நாடு சிறை மீண்டோர் நலச்சங்கம் சார்பில்** சிறையிலிருந்து முன் விடுதலை செய்யப்பட்ட 750 முன்னாள் சிறைவாசிகளுக்கு சுயதொழில் தொடங்கிட 3 கோடியே 75 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் இன்று வழங்கினார்.

இதன்மூலம் முன்னாள் சிறைவாசிகளின் வாழ்வாதாரம் மேம்படும்.

இந்நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. ரகுபதி, திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

❖❖❖❖❖❖

**தர்மபுரி வாய்ஸ்**

**தர்மபுரியில் குழந்தைகள் நலன், சிறப்பு** சேவைகள் துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் அரசுபள்ளி ஆசிரியர்களுக்கு திறன்பயிற்சி இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் குழந்தைகளின் பாதுகாப்பு, ஆசிரியர்களின் பொறுப்புணர்வை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆர்.சதீஷ் வலியுறுத்தினார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**நில ஆவணங்கள்**

**அரியலூர் நகராட்சியில் நில ஆவணங்களை** நவீனமயமாக்கும் மத்திய அரசின் நில அளவை திட்டத்தை ஆட்சித்தலைவர் திரு.ரத்னசாமி இன்று தொடங்கிவைத்தார்.

இந்த திட்ட செயலாக்கத்தால் நிலம் மற்றும் வீடுகளுக்கான வரிவிதிப்பு எளிமையாக்கப்படும் என கூறினார்.

ட்ரோனை பயன்படுத்தி நில அளவை மேற்கொண்டு ஒளிபடம் உருவாக்கப்பட்டு புல வரைபடம் தயார் செய்யப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

**திண்டுக்கல் வாய்ஸ்**

**திண்டுக்கல் வேடசந்தூரில் ஒன்றாம் வகுப்பு மாணவி, 30** பரதநாட்டிய முத்திரைகளை 30 நொடிகளில் சொல்லி உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**இருவரி**

**பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்** மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் வழங்குவதற்கான பயனாளிகள் தேர்வு நாளை நடைபெறவுள்ளதால் தகுதியுடையோர் இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ்பச்சாவ் தெரிவித்துள்ளார்.

**திருச்சியில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தமிழ்நாடு** அரசு பணியாளர் தேர்வாணையத்தின் துணை அரசு வழக்கறிஞர் ஆரம்பநிலை தேர்வை 481 தேர்வர்கள் இரு தேர்வு மையங்களில் எழுதவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள்** கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ரத்னசாமி கூறியுள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார்த்துறை** வேலைவாய்ப்பு முகாம் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

**திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே** காவல்துறையினர் மேற்கொண்ட வாகன தணிக்கையில் காரில் கடத்திவரப்பட்ட 500 கிலோ புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து 2 பேரை கைது செய்துள்ளனர்.

❖❖❖❖❖❖

**கோவில்**

**திருச்சி வயலூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி** திருக்கோவில் குடமுழுக்கு விழா நாளைகாலை நடைபெறுகிறது.

இதனையொட்டி பக்தர்களின் வசதிக்காக திருச்சி மத்திய பேருந்து நிலையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து சிறப்பு பேருந்துகள் வயலூருக்கு இயக்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖

**ஹாக்கி**

புபனேஸ்வரில் நடைபெறும் ஹாக்கி ப்ரோ லீக் போட்டிகளில் இந்தியா ஆடவர் பிரிவில் - ஜெர்மனியையும்

மகளிர் பிரிவில் ஸ்பெயினையும் இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிகள்** நாளை தொடங்குகின்றன.

கராச்சியில் நாளை நடைபெறும் ஆட்டத்தில் குரூப் ஏ பிரிவில் பாகிஸ்தான் - நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

இந்தியா தனது முதல் போட்டியில் துபாயில் நாளைமறுநாள் பங்களாதேஷுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**